**ரம்புக்கனை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 16 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரம்புக்கனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 299,820 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்படாததால் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கு மீதி மற்றும் நூலகப் புத்தகங்களது மீதி என்பன ஒவ்வொன்றும் ரூபா 299,820 குறைவாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,700,292 ஆகும். எனினும், அது ரூபா 2,812,501 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதியக் கணக்கு என்பன ஒவ்வொன்றும் ரூபா 1,112,209 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் பெறப்பட்ட முத்திரைக் கட்டண வருவாய் நிலுவையான ரூபா 6,356,701 மீளாய்வாண்டின் வருவாயாகக் கருதப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டினது ஏப்ரல், ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான முத்திரைக் கட்டணப் பட்டோலையைத் தயாரிப்பதற்கு கேகாலை மாவட்டப் பதிவாளருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 17,600 படியானது மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதப்பட்டுக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது மிகை ரூபா 17,600 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முத்திரைக் கட்டணப் பட்டோலையைத் தயாரிப்பதற்கு கேகாலை பதிவாளர் நாயகத்திற்கு மே, செப்டம்பர், ஒக்டோபர், நொவெம்பர், டிசெம்பர் மாதங்களுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 25,300 மற்றும் மீளாய்வாண்டினது சனவரி முதல்

மார்ச் வரையிலான காலப்பகுதிக்குரிய கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 56,800 என்பன கணக்கிலிடப்படாமையால் ஆண்டிற்கான மிகையும் திரண்ட நிதிய மீதியும் முறையே ரூபா 56,800 மற்றும் ரூபா 25,300 என்பவற்றால் அதிகரித்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் ரூபா 82,100 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 114,121 கணக்காய்வுக் கட்டணமானது மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவுமில்லை.

(எ) ஊழியர் பிணை வைப்புப் பணம் ரூபா 44,200, ஊழியர் பிணை வைப்பு வட்டி ரூபா 2,051 எனக் கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டமையால் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை வைப்பு வட்டி என்பன அதேயளவு அதிகரித்தும் ஊழியர் பிணை வைப்புப் பெறுமதி ரூபா 46,251 அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) முன்னைய ஆண்டினது ஆகஸ்ட் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத் தண்டப் பணப் பட்டோலையைத் தயாரிப்பதற்கு சபரகமுவ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 12,610, மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதப்பட்டு கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 12,610 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) கணக்காய்வுத் தினத்தன்றும் முடிவடையாதிருந்த ஒரு வேலையின் பொருட்டு மதிப்பிடப்பட்ட பெறுமதியாகிய ரூபா 523,000 க்குக் கடன்கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதால் மூலதனச் செலவினமும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் பெறுமதியும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிசார் கூற்றுக்களின்படி, 07 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 43,922,139 ஆகும். அதனோடு தொடர்புடைய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின்படி கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 70,933,074 ஆகும். வித்தியாசம் ரூபா 27,010,935 ஆகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய மீதிகளது பெறுமதி ரூபா 57,397,453 ஆகும். அதில் ரூபா 3,869,825 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 1,784,395 ஆகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சபரகமுவ மாகாண சபையின் தலைமை அமைச்சுச் செயலாளரது 2010 நவெம்பர் 16 ஆந் திகதிய சீஎம்/ஏடீ/20 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, சுகாதார மற்றும் வீதித் தொழிலாளர் பதவிகளில் நிரந்தர நியமனம் பெற்ற 5 பேர் நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டவாறல்லாது சாரதிகளாகப் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 20,327,341 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 14,642,635 ஆகும். இதனால் மீளாய்வாண்டின் போதிலான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 5,684,706 அதிகரிப்பு தென்படுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டின்போது நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட ரூபா 5,684,706 அதிகரிப்பிற்கு 05 வருவாய் விடயங்களினது அதிகரிப்பும் 07 செலவின விடயங்களது குறைவும் பிரதான காரணிகளாகின.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், திரண்ட வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,359,445 | 842,055 | 6,113,558 | 5,426,179 | 1,517,390 | 687,380 | 2,204,770 |
| (ii) | குத்தகை வாடகை | 647,633 | 104,304 | 6,837,879 | 6,629,715 | 543,329 | 208,164 | 751,493 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 709,769 | 697,315 | 3,122,301 | 3,122,301 | 12,454 | - | 12,454 |
| (iv) | ஏனைய வருவாய் | 9,943,704 | 7,130,883 | 77,431,266 | 60,965,769 | 2,812,822 | 16,465,497 | 19,278,319 |
| | **மொத்தம்** | **13,660,550** | **8,774,556** | **93,505,004** | **76,143,963** | **4,885,994** | **17,361,041** | **22,247,036** |

#### 2.3.2 தீர்வையும் வரியும்

தீர்த்து வைக்கப்படாது 10 ஆண்டுகளாக நிலவிவரும் தீர்வை வரியான ரூபா 106,633 சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(ஆ) பிரிவின் பிரகாரம் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,144,998 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 11,143,299 |

### 2.3.4 விளையாட்டு மைதான வாடகை

(அ) விளையாட்டு மைதானங்களை ஒதுக்கீடு செய்கையில் முற்பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பிரதேச சபைக்குச் சொந்தமான 03 விளையாட்டு மைதானங்களை 2015 ஆம் ஆண்டின்போது தமக்கென ஒதுக்கீடு செய்த நபர்கள் குறித்த கட்டணத்தைச் செலுத்தாது 77 சந்தர்ப்பங்களில் சபை இழப்பிற்குள்ளான தொகை ரூபா 136,000 ஆகும்.

(ஆ) விளையாட்டு மைதானங்களை ஒதுக்கீடு செய்கையில் சபைத் தீர்மானமின்றி தலைவரது சிபார்சிற்கமைய கட்டணத்தை அறவிட்டமையால் 2015 ஆம் ஆண்டில் ஒக்டோபர் 31 வரையான காலப்பகுதியின்போது மாத்திரம் 07 சந்தர்ப்பங்களில் சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 9,000 ஆகும்.

### 2.3.5 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 159/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் தொலை பேசிக் கோபுரங்களை நிர்மாணிக்கையில் அவற்றினது உயரத்தின் பிரகாரம் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் மற்றும் செய்முறைக் கட்டணம் என்பவற்றை அறவிடவேண்டும். எனினும், அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 06 தொலை பேசிக் கோபுரங்களுக்கு ரூபா 171,000 அறவிடப்படவில்லை.

### 2.3.6 விளம்பரப் பலகைக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள 05 பிரசார நிறுவனங்களது நிரந்தர விளம்பரப் பலகைகளின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா 160,154 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.7 வியாபார வரி

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படும் வர்த்தகம் தொடர்பான அளவையை மேற்கொண்டு வர்த்தக அனுமதிப் பத்திர வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டின் பொருட்டு 14 நிறுவனங்களிலிருந்து அனுமதிப் பத்திர வருவாயைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு வழங்கப்படுவது அவசியமற்றதாயினும், 09 பிரதேச சபை ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 25,707 பங்களிப்பாக வழங்கப்பட்டிருந்தது.

**3.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

---

2015 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 06 செலவின விடயங்களுக்கான மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 435,000 முற்றாகச் சேமிப்புக்குள்ளாகியது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) வருவாய் நிர்வாகம்

(iii) சொத்து முகாமைத்துவம்